AstroVed

மாலை: 1

# சத்வித்யா

மலர்: 12

எஸ்பி -75, சிட்கோ தொழில்துறை எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600058.

மாதம் இரு முறை
வெளிவரும்
பிப்ரவரி 16முதல்
28வரை

ஆன்மீக
விஞ்ஞான
இதழ்



## செல்வ வளங்களை அள்ளித்தரும் ஸ்ரீம் மந்திரம்

- நினைத்தது நிறைவேற
- அரிய ஆன்மீக தகவல்
- மூலிகை ரகசியம்
- பிப்ரவரி மாத ராசிபலன்கள்

அனைத்து இதழ்களையும் AstroVed.com இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு செய்து பயன் பெறலாம்
மேலும் விபரங்களுக்கு போன்: 88702 88701, www.astroved.com

AstroVed

# சத்வித்யா



நம்முடைய தேவைகள் ஒவ்வொன்றிற்கும்
ஒரு தெய்வம் உண்டு, செல்வத்திற்கு லக்ஷ்மி, குபேரன், அறிவுக்கு ஹயக்ரீவர், கல்வி, கலைகளுக்கு சரஸ்வதி இப்படி தெய்வங்கள் உண்டு, அந்த ஆற்றலை நாம் எவ்வாறு பெற முடியும்?
ஒலி அலைகளால் முடியும் அதை சப்தங்கள் என்போம், அவை தான் மந்திரங்கள் இந்த மந்திரங்களை தொடர்ந்து நாம் சொல்லிக் கொண்டே இருக்கும் போது அந்த தெய்வங்களின் ஆற்றல் நம்மை வந்து சேர்கிறது. அதைவிடுத்து, இது நடக்குமா? முடியுமா? என எதிர்மறை எண்ணத்தோடு இருந்தால் எதையும் பெற முடியாது, இந்த மந்திரங்கள் நம் மூளையில் செயல்பட்டு நாம் வேண்டுவதை வழங்குகின்றன.

~ Dr. Baskaran Pillai

சத்வித்யா நேயர்கள் அனைவருக்கும் வணக்கங்கள்! நூறு சதவீதம் இல்லாவிட்டாலும் தற்போது நாம் சகஜ நிலைக்குத் திரும்பிவிட்டோம் கடந்தகாலக் கொடிய நிகழ்வுகள் மெல்ல மெல்ல நம்மை விட்டு விலகிச் சென்று கொண்டிருக்கிறது. இனி எல்லாம் நலமே. மாசி மாதம் பிறந்துள்ளது. இந்த மாசி மாதத்தில் தான் நமது ஆலயங்கள் அனைத்திலும் மாசிமகம் கொண்டாடப்படும்.
இது மட்டுமல்லாமல் அம்மன் ஆலயங்களிலும் பல சிவாலயங்களிலும் பிரம்மோற்சவ விழாக்கள, அதாவது மாசித்தேரோட்டம், பிரம்மோற்சவம் ஆகியன விமரிசையாகக் கொண்டாடப்படும்.



நமது நேயர்கள் அனைவரும் நீதி, நேர்மை இதற்கெல்லாம் கட்டுப்பட்டு தர்ம நெறிகளை மதித்து வாழ வேண்டும் என்பதே எங்களது விருப்பம் அதுபோலவே அனைவரும் தங்கள் கிரக நிலைகளை அறிந்து தொழில், குடும்பம் என அனைத்து சூழ்நிலைகளிலும் சாதகமான பலன்களைக் கண்டறிந்து, தங்கள் வாழ்வை வளமாக்கிக்கொள்ள எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

அன்புடன்


(அச்சிட்டு வெளியிடுவோர்)
ஆஸ்ட்ரோவேட்.காம்

# அப்பா பைத்தியம் சுவாமிகள்

”பகிர்ந்து தின்றால் பசி ஆறும்
தானே தின்றால் நோய்வரும்”

”மனமது செம்மையானால் மந்திரம் எதற்கு?
சம்சாரிக்கு மந்திரம் தேவையில்லை,”

அந்த மகானின் திருவாய் உதிர்த்த இந்த சொல்முத்துகள் சாமான்ய மக்களுக்கு.




அதே நேரத்தில்,
”நான், எனது என்று சொல்லாதவன் எவனோ அவனே துறவி, தனக்கென்று மடம் அமைத்து அடுத்த வேளைக்கு உணவை சேமித்து வைத்து பிறரிடமிருந்து எதையும் எதிர்பார்ப்பவன் துறவியாக இருக்க மாட்டான்.

இந்த சொற்கோவை துறவிகளுக்கு. இப்படி சொன்னவர் யார்? இவரும் ஓர் துறவிதான் அப்பா பைத்தியம் சுவாமிகள் என்று பக்தர்கள் அன்போடு அழைப்பார்கள் இவரை! இவரது ஜீவசமாதி சேலம் மாநகர், சூரமங்கலத்தில் அமைந்துள்ளது.
யார் இவர்?
சொந்த ஊர் எது?
இவரது வயது என்ன?
அப்பா பைத்தியம் என்ற பெயர் இவருக்கு வந்தது எப்படி?

நமது சித்தர் பூமி பகுதியில் இன்று இந்த மகானைப் பற்றி தெரிந்து கொள்வோம்.

பாண்டிச்சேரி மக்களாலும் அம்மாநில அரசியல் புள்ளிகளாலும் நன்கு அறியப்பட்ட அனைவராலும் வணங்கப்பட்ட இந்தமகான் பிறந்தது கருவூர் கோட்டை ஜமீன் பரம்பரையில்! தனது பதினோராவது வயதில் வீட்டை விட்டு வெளியேறிய இவர் பழனி மலைக்கு சென்று சிலகாலம் தங்கியிருந்தார். அப்போது

இவருக்கு முருகப் பெருமானின் ஞானி அருள் ஒளி பட்டுள்ளது. அன்றிலிருந்து ஓர் இளம் ஞானியாய் பக்தர்களால் போற்றப் பட்டுள்ளார்.

அதோடு, வேட்டைக்காரன் புதூர் அழுக்கு சுவாமிகளை குருவாக ஏற்று அவரிடம் உபதேசம் பெற்றுள்ளார். அன்று முதல் வரும் பொருள் உரைக்கும் ஞானியாய், பார்வையாலும் ஸ்பரிசத்தாலும் குறைகள் தீர்க்கும் மகானாய் வலம் வந்துள்ளார்.

அண்மைக் காலத்தில் மக்களோடு மக்களாய் வாழ்ந்து, மிகச்சிறந்த உபதேசங்களை செய்து கடவுளுக்கும் மேலான கருணையைப் பொழிந்து பக்தப் பெருமக்களால் வணங்கப்பட்டு வருபவர் தான் மகான், அப்பா பைத்தியம் சுவாமிகள்.

இவரது வயதை அறிய முயற்சிக்கும் போது சற்றே இவருடைய இறுதிக்காலத்தை நோக்க வேண்டியுள்ளது. அதாவது மக்களின் துயர்களைத் தான் தாங்கும் சுமைதாங்கிகள் தான் மகான்கள்! அந்த வகையில் சுவாமிகள், தனது இறுதிக்காலத்தில் புற்று நோயால் பாதிக்கப்பட்டு, அப்பல்லோ மருத்துவமையில் சேர்க்கப் பட்டிருந்தார். அவரை அங்கு சேர்த்தவர்கள் 80வயது என்று குறிப்பிட்டிருந்தனர்.

சிகிச்சையளிக்கின்றபோது மருத்துவர்கள், இவரிடம் பேச்சு கொடுக்க எண்ணி, உங்கள் வயது என்ன? என்று கேட்க...140 என்று சற்றும் தாமதிக்காமல் பதிலளித்துள்ளார். மருத்துவர்கள் ஆச்சர்யத்தில் மூழ்கி, அவரது வயதை அறிகின்ற சில சோதனைகளை செய்து பார்க்க, அவருடைய வயது 140 தான் என்பதை உறுதிபடுத்திய மருத்துவர்கள் அவருக்கு கிடைத்துள்ளது இறையருளா? அல்லது, இறைவனே இவரது உருவத்தில் உலவி வருகிறாரா என வியந்த நிகழ்வு நடந்துள்ளது.

இந்த அடிப்படையில் அவர் தெரிவித்தது 1859ம் ஆண்டு இந்த மகான் பிறந்தார் என்பது உறுதிபடுத்தப்பட்டது, இவர் இறைவனோடு ஐக்கியமடைந்தது, 2000வது ஆண்டு ஆக தனது 141வது வயதில் சுவாமிகள் முக்தியடைந்துள்ளார்.

இந்த நூற்றாண்டில் 140 வயது என்பது கற்பனை செய்து கூடப் பார்க்க முடியாத ஒன்றாய் இருக்கின்ற போது, அது இந்த மகானால் சாத்தியப்பட்டுள்ளது அதிசயம் தான்.

சரி
இவருக்கு அப்பா பைத்தியம் என்று பெயர் வந்தது எப்படி? இவரை நீண்டகாலமாக வணங்கிவரும் பாண்டிச்சேரி பக்தர்களிடம் இந்தக் கேள்விக்கான விடை கிடைத்தது அதாவது...

சுவாமிகள் எப்போதும் நான் ஒரு பைத்தியம் என்று அடிக்கடி சொல்வாராம். வருகின்ற பக்தர்கள் எல்லோரும் சுவாமிகளோட வயதைக்கருதி அப்பா அப்பா என்றே அழைப்பது வழக்கமாம். அதனால் தான் இவரை அப்பா பைத்தியம் சுவாமி என எல்லோரும் அழைத்தனர் என அறிய முடிகிறது.

இந்த உலகத்துல நான் இருக்கவா? போகவா? என வாழ்வின் விளிம்பிற்குத் தள்ளப்பட்டவர்கள் கூட நிலையாக, நிம்மதியாக வாழ வழி செய்தவர் நம் சுவாமிகள் வருகின்ற பக்தர்களிடம் பரிவோடு பேசி,

அன்போடு அரவணைத்து ஆசி வழங்கிய இவரது எளிய நடைமுறை அனைத்துத் தரப்பு மக்களையும் கவர்ந்ததாக, அவரது பக்தர்கள் சிலாகித்துக் கூறுகிறார்கள்.

இவரை ஆத்மார்த்தமாக அணுகி, உளமாற சரணடைந்த அனைவருக்குமே நல்லதோர் வாழ்வினை தனது கருணையால் வழங்கிய மகான்தான் அப்பா பைத்தியம் சுவாமிகள்.

சுவாமிகள், உயிரோடு இருந்த காலத்தில் அனுதினமும் வலியுறுத்திக் கூறியது அன்ன தானத்தின் பெருமையை பற்றித்தானாம், அவரது எண்ணத்தை ஈடேற்றும் வகையில் இன்றளவும் இவரது ஜீவசமாதியில் சனிக்கிழமை தோறும் அன்ன தானம் சிறப்பாக மிகப்பெரும் அளவில் இங்கே ஏற்பாடு செய்யப்படுகிறது. பௌர்ணமி தினத்திலும் அன்னதானம் நடைபெறுகிறது.

இந்த ஜீவசமாதி அமைந்துள்ள திருக்கோயில் உட்சுவர்களில், சுவாமிகள் வாழ்ந்த காலத்தில் திருவாய் மலர்ந்தருளிய பொன்மொழிகள்...அதாவது, அன்னதானத்தின் சிறப்புகள் அனைத்தையும் பக்தர்கள் யாவரும் நினைக்கும் படியாக எழுதி வைத்துள்ளனர்.

உண்மை, தூய்மை, நேர்மை, பசியாற்றுதல் இவையே சுவாமிகளின் எண்ண வோட்டத்தில் நிறைந்திருந்ததாக, சுவாமிகளை சந்தித்து நேரில் ஆசிபெற்ற அனைவருமே தெரிவிக்கின்றனர்.

சுவாமிகள் பாண்டிச்சேரியில் இருந்தபோது, தனது உறவினரைக் காணச்சென்ற, ஜமீன் பரம்பரையை சேர்ந்த முத்து மணி ராஜா என்ற சேலத்தை சேர்ந்த நபர், தன் பிரச்சினையை சொல்ல, விரைவில் தீரும் என்று சுவாமிகள் ஆசி வழங்கியுள்ளார். அவர் தங்கள் இல்லத்தில் எழுந்தருள வேண்டும் என்ற எண்ணத்தை சுவாமிகளிடம் இவர் தெரிவிக்க, சுவாமிகளும் சேலத்திற்கு வந்து இவரது இல்லத்தில் தங்கியுள்ளார்.

அப்படி சுவாமிகள் தங்கியிருந்த இடத்திலேயே ஜீவசமாதி அடைந்து, இன்று அனைவரும் வணங்கத்தக்க ஆலயமாக அருளொளி வீசிக்கொண்டிருக்கிறது.

ஜீவசமாதியில் அப்பா பைத்தியம் சுவாமிகளின் திருவுருவச்சிலை அமைக்கப்பட்டுள்ளது. மேலும் சுவாமிகளின் மெழுகுச்சிலை தத்ரூபமாய் அமைந்து கருணை ஒளி உமிழும் கண்களோடு, காரிய சித்தியை அனைவருக்கும் வழங்குகின்றது.

இந்த நூற்றாண்டில் 140 வயது வரை வாழ்ந்து மக்களின் துயர் தீர்த்த அப்பா பைத்தியம் சுவாமிகளின் ஜீவசமாதியை தரிசித்து, குறைகள் தீர்ந்து, கோலாகலமான வாழ்வினைப் பெறுவோம்.

~ ரா. பன்னீர்செல்வம்

# செல்வ வளங்களை அள்ளித்தரும் ஸ்ரீம் மந்திரம்



ஒவ்வொரு ஒலிகளுக்கும் ஒவ்வொரு விதமான விஷயங்களை ஈர்க்கும் தன்மை உண்டு. சில ஒலிகளுக்கு குணப்படுத்தும் ஆற்றல்களும் நிறைந்து உள்ளன. மனிதனின் சில குணங்களை மாற்றும் வல்லமை ஒலி அலைகளுக்கு உண்டு. அதனால் தான் சில ஒலிகளை மந்திரமாக உச்சரிக்க செய்து எந்திரங்களில் உரு ஏற்றப்படுகிறது. எத்தனையோ மந்திரங்களில் ஸ்ரீம் மந்திரமானது இவ்வுலகபற்றை குறிக்கும் தனம், வீடு, வண்டி மற்றும் சொத்துக்களை ஈர்க்கும் சக்தி பெற்று இருக்கிறது. இந்த மந்திரமானது மஹாலக்ஷ்மி தேவியினுடையது ஆகும். இந்த மந்திரத்தை ஜபிப்பதால் மஹாலக்ஷ்மியின் அருளை பெற்று லக்ஷ்மி கடாட்சத்தை பெறமுடியும். இந்த மந்திரத்தை ஜபிப்பதால் கணவன் மனைவிக்கு இடையே வசீகரத்தை ஏற்படுத்தி நல்ல தாம்பத்யத்தை ஏற்படுத்தி நல்லிணக்கத்தை கூட்டும் தன்மையுடையது.

## ஸ்ரீம் மந்திரத்தை உச்சரிக்கும் முறை:



இத்தனை அற்புத பலன்களை ஏற்படுத்தும் ஸ்ரீம் மந்திரத்தை காலை கடன்களை முடித்து, உணவிற்கு முன் ஒரு சேரில் வசதியாக அமர்ந்து கொள்ளவேண்டும். கண்ணை மூடிக்கொள்ள வேண்டும். இரண்டு நிமிடங்களுக்கு நன்றாக மூச்சை இழுத்து விடவேண்டும். பின்பு இருபது நிமிடங்களுக்கு ஸ்ரீம், ஸ்ரீம், ஸ்ரீம்.... என்று மனதிற்குள்ளேயே சொல்ல வேண்டும். மந்திரத்தின் மீது நாட்டம் குறைந்து எண்ண ஓட்டங்கள் மேலோங்கும் எந்த எண்ணம் ஓட்டம் மேலோங்கி வருகிறதோ அந்த எண்ணம் சார்ந்த பிரச்சனைகளை எளிதாக அணுக முடியும். பிரச்சனைக்கு தீர்வும் கிடைக்கும் தினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் இந்த மந்திரத்தை ஜபித்து வந்தால் லக்ஷ்மியின் அருள் கிடைக்கப்பெற்று செல்வ வளங்களை பெற முடியும்.

~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்

# அரிய ஆன்மிக தகவல்

சென்னை, கோயம்பேட்டில் அமைந்துள்ள குறுங்காலீஸ்வரர் ஆலயத்தில் கருவறைக்கு எதிரில் அமைக்கப்பட்டிருக்கும் பிரதோஷ நந்தி, மூக்கணாங்கயிற்றோடு இருக்கும். வேறு எந்த ஆலயத்திலும் இப்படிப்பட்ட நந்தியை பார்க்க முடியாது.



இந்த ஆலயத்தின் வெளி மண்டபத்தில் உள்ள தூண்கள் அனைத்தும் அற்புதமான சிற்பங்களைத் தாங்கியதாய் அமைந்துள்ளது. குறிப்பிடத்தக்கதாக, ஒரு தூணில் அமைக்கப் பட்டிருக்கும் சரபேஸ்வரர், நரசிம்மர் சிற்பம் மிகவும் சக்தி வாய்ந்ததாக கருதப்பட்டு சிறப்புப் பூஜைகள் நடைபெற்று வருகின்றது. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் ராகுகால நேரத்தில் சரபேஸ்வரருக்கு நடைபெறும் யாகம் மற்றும் பூஜைகளில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொள்கின்றனர். பிரார்த்தனை சீட்டுகளை பக்தர்கள் எழுதிக்கொடுக்க, அவை நல்ல முறையில் நிறைவேற கூட்டுப் பிரார்த்தனை நடைபெறுகிறது.

ஆலயத்தின் கருவறையில் குறுங்காலீஸ்வரராக அருள்புரியும் சிவலிங்கம் மடக்கு லிங்கம் என்று அழைக்கப்படுகிறது. உயர்ந்து விளங்க வேண்டிய லிங்கப் பகுதி மிகவும் குறுகி, சுமார் 5 அங்குலமே மடக்கு போல இருப்பதால் இதனை மடக்கு லிங்கம் என்று கூறுகிறார்கள்.
சென்னைக்கு அருகில் உள்ள அச்சிறுப்பாக்கத்தில் அமைந்திருக்கும் ஆட்சீஸ்வரர் ஆலயத்தில் சுவாமிக்கு இரண்டு கருவறைகள் உள்ளது. ஒன்றில் ஆட்சீஸ்வரரும் மற்றொன்றில் உமையாட்சீஸ்வரரும் தரிசனம் தருகின்றனர் சுவாமி உமையுடன் சிலைவடிவில் காட்சி தருகிறார். இது தென்திசை வந்த அகத்தியருக்கு இறைவன் தனது திருமணக் கோலத்தைக் காட்டிய தலம் என்று கொண்டாடப்படுகிறது.

ஆலயங்களில் ராஜகோபுரம், கொடிமரம், கருவறை ஆகியவை ஒரே நேர் கோட்டில் அமைந்திருப்பது வழக்கம். ஆனால், இந்த ஆட்சீஸ்வரர் ஆலயத்தில் அவரது கருவறைக்கு நேராக கொடி மரமும் உமையாட்சீஸ்வரர் கருவறைக்கு நேராக ராஜகோபுர வாயிலும் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இந்த ஆலயத்திற்கு அருகில் அமைந்திருக்கிறது அச்சிறு விநாயகர் ஆலயம். இவர் மிகவும் சக்தி வாய்ந்தவர். இறைவன் ஈசன் முப்புரம் எரிக்க புறப்பட்டார். தேவர்கள் அனைவரும் ஈசனுக்கு உதவும் பொருட்டு தேரின் பாகங்களாக மாறினர். அந்தத்தேரில் இறைவன் ஏறி முப்புர சம்ஹாரத்திற்கு செல்ல... முழுமுதற்கடவுளான தன்னை வணங்காமல் சென்றதால் தந்தை சென்ற தேரின் அச்சினை முறியச் செய்தாராம், விநாயகர் அந்த நிகழ்வு நடந்த தலமே இந்த அச்சிறு பாக்கம் இந்த அச்சிறு விநாயகரை வணங்கி செய்யப்படும் அனைத்து காரியங்களும் வெற்றியையே தரும்.

~ ரா. பன்னீர்செல்வம்

# பள்ளூர் ஸ்ரீ வாராஹி அம்மன்

அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகியாம் ஆதிபராசக்தியின்
தலைமை அதிகாரியாக அருள்பவளே வாராஹி.

காசியில் தனிக்கோயில் கொண்ட இந்த தேவிக்கு, தமிழ்நாட்டில் பள்ளூரிலும் ஓர் ஆலயம் உள்ளது. ஆயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன்பு தற்போது வாராஹி தேவி அருள்புரியும் இந்த கருவறையில் மந்திரகாளியம்மன் வீற்றிருந்தாள்.




ஒரு துர்மந்திரவாதி மந்திரகாளியம்மனையே மந்திரத்தால் கட்டிப்போட்டு சக்தியை ஒடுக்கி வைத்திருந்தான். அந்த இறுமாப்பில் அட்டகாசங்கள் பல செய்தான்.

அன்னையும் காலம் வருமென்று தெரிந்து வேடிக்கை பார்த்தாள். அருகிலிருந்த ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. அதனோடு அருட்பெருங் கருணையான அன்னை வாராஹியும் மிதந்து வந்தாள்.

மெல்ல கரை தொட்டு எழுந்தாள். அங்கிருந்த கோயிலுக்குள் மந்திரகாளியம்மன் இருப்பதை அறிந்து கோயில் திறக்க வேண்டி நின்றாள். க்ஷதுர்மந்திரவாதி என்னை கட்டி வைத்துள்ளான். கதவைத் திறந்தால் ஆபத்து வரும் என்று சொன்னாள் மந்திரகாளியம்மன்.

அகிலத்தையே ஆட்டிவைக்கும் வாராஹி சிரித்தாள். எப்படியாவது உன்னைக் காப்பாற்றுவேன் என்று உறுதி சொன்னாள்.

சப்த மாதர்களில் ஒருவளான வாராஹி துர்மந்திரவாதியை வதம் செய்யப்போகும் நிகழ்வைக் காண மற்ற அறுவரான பிராம்மி, மாகேஸ்வரி, கௌமாரி, வைஷ்ணவி, இந்திராணி, சாமுண்டி ஆகியோர் ஆலய வாயிலில் காத்திருந்தனர்.

நடுநிசியில் ஆலய வாயிலை எட்டி உதைத்தான் துர்மந்திரவாதி.
கோபக் கண்களோடு காத்திருந்த வாராஹி தேவி அவனை இரண்டாக வகிர்ந்து, கிழித்துத் தூக்கி எறிந்தாள்.
மந்திரகாளியம்மன் விடுவிக்கப்பட்டாள்.

வாராஹியிடம், தாங்களே இந்த கருவறையில் அமர வேண்டும் எனக் கேட்டுக் கொண்டாள்.

துர்மந்திரவாதியின் உடல் விழுந்த இடத்தின் அருகில் மந்திரகாளியம்மன் கோயில் கொண்டாள்.

ஆலயத்தின் முகப்பில் சங்கு, சக்கரம், அபய, வரதம் தாங்கிய திருக்கோலத்தில் வாராஹி தேவி அருள்கிறாள்.

இரு புறங்களிலும் தோழியர் சாமரம் வீசி அன்னையை குளிர்விக்கின்றனர். அர்த்தமண்டபத்தின் முகப்பிலும் வாராஹி தேவியின் இரு புறங்களிலும் இரு சிங்கங்கள் ஆரோகணிக்கின்றன. மந்திரகாளியம்மன் சிறிய வடிவில் தோழியருடன் காட்சி தருகிறாள். வேப்பமரம், தலமரம். பேரெழிலுடன் காஞ்சி காமாட்சி, மதுரை மீனாட்சி, காசி விசாலாட்சி போன்றோரும், சப்தமாதர்களும் சுதை வடிவில் அருள்கின்றனர்.

கருவறை கோபுரத்தில் வாராஹி, வைஷ்ணவி, மகாலட்சுமி ஆகியோர் பொலிவுடன் திகழ்கின்றனர். ஆலய வலம் வந்து சங்கு, சக்கரம் ஏந்திய துவாரபாலகியரின் அனுமதி பெற்று பலிபீடம், சிங்கத்தை அடுத்து, கருவறையின் வலதுபுறம் விநாயகப்பெருமானை தரிசிக்கிறோம். மூலக் கருவறையில் இரு வாராஹிகளை தரிசிக்கலாம்.

ஒருவர், சிறு வடிவிலான ஆதிவாராஹி, அடுத்தவர் பெரிய வடிவிலான தற்போதைய வாராஹி. இந்தப் பெரிய வாராஹியின் பீடத்தில் ஆறு மாதர்களின் சிற்பங்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன.

எருமை வாகனத்தில், பத்மாசனத்தில், நான்கு திருக்கரங்களில் சங்கு, சக்கரம், அபய-வரத முத்திரைகள் தாங்கி தெற்கு நோக்கி அருள் பொங்க வீற்றிருக்கிறாள் அன்னை.

பூமியையே தன் பன்றி முகக்கொம்புக்கிடையில் தாங்கி காத்தருளிய மஹாவிஷ்ணுவைப்போல இந்த உலகோர் அனைவரையும் தன் பன்றிமுக அருட் பார்வையால் காத்து ரட்சிக்கிறாள் வாராஹி.

தன் அங்க தேவதையான லகுவார்த்தாலியையும், பிரத்யங்க தேவதையான ஸ்வப்ன வாராஹியையும், உபாங்க தேவதையான திரஸ்கரணியையும் தன்னுள்ளே ஏற்றிருக்கிறாள். தன் முன்னே நிறுவப்பட்டுள்ள ஸ்ரீசக்ரத்தின் மூலம், மேலும் தன் சக்தியை மகோன்னதமாக்கி பக்தர்களை வளப்படுத்து கிறாள். ஒவ்வொரு வளர்பிறை, தேய்பிறை, பஞ்சமி தினங்களில் இந்த அன்னையின் சந்நதியில் வாழை இலையில் அரிசியைப் பரப்பி, உடைத்த தேங்காயில் நெய் தீபம் ஏற்றி வழிபடுகிறார்கள் பக்தர்கள்.

சரிந்தவர்களையும் அன்னை அரவணைத்துத் தூக்கிச் சென்று சிகரத்தின் மேல் அமர்த்துகிறாள்.

செவ்வாய்க்கிழமைகளிலும், மற்ற நாட்களின் செவ்வாய் ஹோரை நேரத்திலும் இந்த அன்னையை செம்மாதுளை முத்துக்களால் அர்ச்சிப்போருக்கு, செவ்வாய் தோஷம் நீங்கி திருமணம் கைகூடுகிறது. அபிஷேகம் செய்து சிவப்பு நிற துணியை சாற்றி செவ்வரளிப் பூக்களால் அர்ச்சித்து, சர்க்கரை பொங்கலை நிவேதிக்க, தொழில் வளம் பெருகுகிறது.

முழு கறுப்பு உளுந்தில் வடை செய்து அன்னைக்குப் படைத்திட மன நோய்கள், ஏவல், பில்லிசூன்யம் போன்றவை நீங்குகின்றன.

கரிநாளில் இந்த அன்னைக்கு ஒன்பது இளநீரால் அபிஷேகம் செய்து செவ்வரளிப்பூ சாற்றி, செம்மாதுளை முத்துக்கள், செவ்வாழைப் பழங்களை நிவேதித்தால், குடும்பப் பிரச்னைகள் பஞ்சாகப் பறந்து விடுகின்றன.

இதில் குறிப்பிட வேண்டியது, எந்தவித பூஜைக்கும் இந்த ஆலயத்தில் கட்டணம் வசூலிக்கப்படுவதில்லை. பக்தர்கள் தங்கள் வீட்டிலிருந்தே நிவேதனப் பொருட்களை தயாரித்து வந்து படைக்கலாம்.

வாராஹி தேவிக்கான ஸஹஸ்ரநாமத்தில் ஒரு நாமம், அரசாலை.

இதனால் ஆரம்பத்தில் அரசாலை அம்மன் என்றே இந்த தேவி வணங்கப்பட்டிருக்கிறாள். சிங்கத்தை வாகனமாகக் கொண்டு மூவுலகங்களுக்கும் தேவியான லலிதா பரமேஸ்வரியின் சேனா நாயகியாக தண்டநாதா எனும் திருநாமமும் இவளுக்கு உண்டு.

வாராஹி கல்பம் எனும் நூலில் வாராஹிக்கு பல்வேறு வாகனங்கள் உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. வாகன விபத்துகள் ஏற்படாமலும் இவள் காக்கிறாள்.காஞ்சிபுரத்திலிருந்து அரக்கோணம் செல்லும் வழியில் திருமால்பூர் ரயில் நிலையத்திற்கு அருகிலுள்ளது பள்ளூர்

அன்னையை பற்றிய இன்னும் பல அரிய தகவளை தெரிந்துகொள்ள காத்திருகள். அடுத்த இதழில் காண்போம்.

ஜெய் வாராஹி!

அம்மனை தரிசனம் செய்வீர் பலன் பெறுவீர்அம்மனை பற்றிய இன்னும் அரிய பல தகவல்களுடன் அடுத்த இதழில் சந்திக்கிறேன்.

ஜெய் வாராஹி!

~ திருமதி. அன்னபிரிய லட்சுமி


Special Birthday Ritual Packages for You
Get 40% OFF
Call: 88702 88701

## மந்திர மகிமை

# நினைத்தது நிறைவேற

நம் எல்லோருக்குமே நினைத்தவை எல்லாம் நிறைவேற வேண்டும் என்ற ஆசை நிச்சயம் இருக்கும். அதற்காக, எவ்வளவோ பிரயத்தனமும் செய்வார்கள். இதில் ஒன்றை கவனிக்க வேண்டும் நான் நினைப்பது நியாயமானகதாக இருக்க வேண்டும். அப்படி நம் எண்ணம் நியாயமானகதாக இருந்தால் அதை நிறைவேற்றித் தருமாறு இறைவனிடம் கோரிக்கை வைக்கலாம். அப்படி நினைத்தவை நிறைவேற சௌந்தர்ய லஹரியின் மந்திரப் பாடல் வழி செய்கிறது. அம்பாளை நினைத்து அந்த மந்திரத்தை ஜபிக்கும் போது, நிச்சயம் அந்த அன்னை நாம் நினைத்ததை நிறைவேற்றித் தருவாள்.



### மந்திரம்

கலங்க: கஸ்தூ ரீ ரஜநிகர - பிம்பம் ஜலமயம்
கலாபி: கர்ப்பூரைர் - மரகதகரண்டம் நிபிடிதம் அதஸ்
தீவத்போகேன ப்ரதிதின - மிதம் ரிக்தகுஹரம்
விதிர் - பூயோ பூயோ நிபிடயதி நூதம் தவக்ருதே

அம்பிகையே!... வானத்தில் பிரதிபலிக்கும் நீர் நிறைந்த மரகதப்பாத்திரமாகத் தோன்றுவது சந்திரமண்டலம் ஆகும். இது பச்சைக் கர்ப்பூர கிரணங்களால் நிரம்பியுள்ளது. நிலவின் கறைபோல தோன்றுவது வாசம் மிகுந்த கஸ்தூரி. இவற்றை நீ தினந்தினம் உபயோகப் படுத்துகிறாய். அதனால் காலியாகும் இந்த பாத்திரத்தை பிரம்மா மீண்டும் மீண்டும் நிரப்பிக் கொண்டே இருக்கிறார்.
இதைப்போல எனது எண்ணங்களும் நியாயமான ஆசைகளும் நிறைவேற அருள்புரிவாய் தாயே!...

### பிரயோகிக்கும் முறை

தங்கத் தகட்டிலோ அல்லது கஸ்துரி, குங்குமப்பூவுடன் அரைத்த சந்தனத்தின் மீதோ இந்த மந்திரத்திற்கான யந்திரத்தை வரைந்து பூஜைக்குப் பன்படுத்த வேண்டும்.

தினமும் 108முறை வீதம் 45நாட்களுக்கு கிழக்கு நோக்கி அமர்ந்து ஜபிக்க வேண்டும். சிவப்பு வண்ண மலர்களால் லிலிதா சஹஸ்ரநாம அர்ச்சனை செய்தல் நலம்.

வெண் பொங்கல், பால்பாயாசம், தேன், மாம்பழம் ஆகியவற்றை நைவேத்யம் செய்யலாம்.

முறைப்படி இதனை செய்கின்றபோது நம் மனதில் தோன்றும் நியாயமான எண்ணங்கள் நிறைவேறி பெயரும் புகழும் நற்செல்வங்களும் கிடைக்கும்.

~ ரா. பன்னீர்செல்வம்

# ஓணம் பண்டிகையோடு தொடர்புடைய மகா சிவாலயம் !

# அருள்மிகு வாமனபுரீஸ்வரர் திருக்கோயில் திருமாணிக்குழி



கடலூரிலிருந்து மேற்கே 4கிலோ மீட்டர் தொலைவில் உள்ள மிகத் தொன்மையான சிவத்தலம் இது.

இறைவன் - அருள்மிகு வாமனபுரீஸ்வரர்
உதவி நாயகர், மாணிக்கவரதர்.

இறைவி - ஸ்ரீ அம்புஜாட்சி அம்பிகை.
உதவிநாயகி, ஸ்ரீ மாணிக்க வல்லி.

தலவிருட்சம் - கொன்றை
தல தீர்த்தம் - சுவேத தீர்த்தம், கெடில தீர்த்தம்

திருஞான சம்பந்தரால் பதிகம் பெற்ற தலம்

சிறப்புத்தகவல் - இத்தல கருவறை எப்போதும் திரையிடப்பட்டே இருக்கும். தீபாராதனையின் போது

மட்டும் திரை நீக்கி தரிசனம் செய்யப்படுகிறது. விஷ்ணு மகாபலி சக்ரவர்த்தியை வதம் செய்த பாவத்திற்காக இத்தல ஈசனை வழிபட்ட தலம்.

கருவறையில் விளக்கில் உள்ள எண்ணெயை குடிக்க எலி ஒன்று வந்தது. அதன் மூக்கு நுனிபட்டு விளக்கு சுடர்விட்டு பிரகாசமாக எரிந்தது. அறியாமல் செய்த நற் செயலால் சிவ பெருமான் மனம் நெகிழ்ந்தது.

எலியை அடுத்த பிறவியில் மகாபலி சக்ரவர்த்தியாக பிறக்குமாறு ஈசன் அருள்பாலித்தார்.

திருமால் வாமன அவதாரம் எடுத்து மகாபலியிடம் மூன்றடி மண் கேட்க, மகபாலியும் இசைவு தெரிவிக்க திரிவிக்ர மூர்த்தியாக எழுந்து ஒரு அடியை மண்ணிலும், ஒரு அடியை விண்ணிலும், மறறொரு அடியை எங்கே வைப்பது என்று விஷ்ணு கேட்க, சுவாமி என் தலையில் வையுங்கள் என்று கூற, அவ்வாறே திருமால் மகாபலிக்கு வீடு பேற்றினை வழங்கி அருளினார்.

தம் நாட்டு மக்களை பெரிதும் நேசித்த மகாபலி சக்ரவர்த்தி வருடத்தில் ஒரு முறை மட்டும் பூலோகத்திற்கு வா அனுமதிக்குமாறு வேண்ட அவரும் அவரது விருப்பத்தை நிறைவேற்றினார். அவ்வாறு மக்களை மகாபலி சக்ரவர்த்தி காண வரும் நாளையே கேரள மக்கள் ஓணம் பண்டிகையாக கொண்டாடுகின்றனர்.


இத்தல ஈசனை மனம் மொழி மெய் ஒன்று பட ஒரு முறை தரிசித்தால் காசிக்கு பதினாறு முறை சென்ற புண்ணியம் கிடைக்கும்.

இத்தலத்தில் பிரதோஷ காலங்களிலும் குறிப்பாக சனி மகா பிரதோஷ காலங்களில் இத்தல ஈசனை தரிசிக்க ஆயிரக் கணக்கில் மக்கள் வருவதுண்டு கோயில் அமைப்பு மிகவும் புராதனமாகவும் கலைநயம் வாய்ந்ததாகவும் அமைந்து மனதை லயிக்க வைக்கும்.
இத்தலபுராணம் வேறு எங்கும் காண இயலாத வகையில் புடைப்பு சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளது. என்பது கூடுதல் செய்தி. எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்பு அமையப் பெற்ற இக்கோயில் சைவ சமயத்தின் அருள் மாட்சியாக அமைந்து உள்ளது. கடலூரை அடுத்த 108 வைணவத் திருப்பதிகளில் ஒன்றான, ஸ்ரீ தேவநாத சுவாமி திருக்கோயில் திரு வஹீந்திரபுரம் மிக சிறப்பு வாய்ந்தது. இந்த தலத்தை அடுத்த ஊரே திருமாணிக்குழி ஸ்ரீ வாமன புரீஸ்வரர் திருக்கோயில்! இப்பகுதி மக்கள் மட்டும் அல்ல அனைத்து பகுதிகளிலிருந்தும் வருகை தந்து வாஞ்சையுடன் அருள் மழை பொழியும் உதவி நாயகரையும், உதவி நாயகியையும் உள்ளமுருக வழிபட்டு செல்கின்றனர்.

எழுதியவர்
சைவ சித்தாந்த செம்மல்
கவிஞர் சீனு செந்தாமரை
கடலூர்

# வாஸ்துவில் வேதைகள்

பொதுவாக வீட்டின் அருகில் கோவில் இருப்பது நன்மை என்று நினைப்போம் அனால் விண்ணிலிருந்து வரும் மின்காந்த சக்தியானது கோவிலில் உள்ள கர்ப்ப கிரகத்தில் உள்ள தெய்வத்திற்கு கீழே பதிக்கப்பட்டுள்ள எந்திரத்திற்கு சென்று விடுவதால் கோவில் அருகில் வசிக்கும் வீடுகளுக்கு கிடைக்காமல் போய்விடுகிறது. இந்த அமைப்பு வாஸ்துவில் வேதை என்று அழைக்கப்படுகிறது. வீட்டின் சுற்றுப்புறத்தில் உள்ள சிலவகையான அமைப்புகள் வீட்டில் வசிப்பவர்களுக்கு வேதனையை ஏற்படுத்தும் வேதனையை ஏற்படுத்தும் சில வேதைகளைப் பற்றி கீழே பார்ப்போம்.




**1. விஷ்ணு வேதை:**

வீட்டிற்கு எதிரில் 300 அடிக்குள் விஷ்ணு கோவில் இருப்பது.

**2. சிவ வேதை:**

வீட்டிற்கு எதிரில் 300 அடிக்குள் சிவன் கோவில் இருப்பது.

**3. சக்தி வேதை:**

வீட்டிற்கு எதிரில் 300 அடிக்குள் சிவன் கோவில் இருப்பது.

**4. மட வேதை:**

வீட்டிற்கு எதிரில் 200 அடிக்குள் துறவிகள் வாழும் மடம் இருப்பது.

**5. கூப வேதை:**

வீட்டின் தலைவாசல் முன் கிணறு இருப்பது.

**6. விருட்ச வேதை:**

வீட்டின் எதிரில் மரம் இருப்பது.

**7. பங்க வேதை:**

வீட்டின் எதிரில் சகதி/சேறு/சாக்கடை நீர் தேங்கி நிற்பது.

**8. நீச வேதை:**

வீட்டின் கிழக்கில் /வடக்கில்/வடகிழக்கில் சாணம் அல்லது குப்பைகள் குவிந்து இருத்தல்.

**9. தரும சாலா வேதை:**

வீட்டிற்கு அருகில் 200 அடிக்குள் தர்மச்சத்திரம் இருப்பது.

**10. சங்காத வேதை:**

வீட்டிற்கு முன் கால்நடைகளைக் கொல்லும் இடம் இருப்பது.


~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்

# மேன்மை கொள் சைவ நீதி உணர்த்தும் சிவ ஞானம்

சிவ நேயமே மெய்யன்பு! சிவச் சிந்தனையே
சிவளருள்!

சிவன் அவன், என் சிந்தையுள் நின்ற அதனால் அவன் அருளாலே அவன் தான் வணங்கி என்ற மணிவாசகப் பெருமானின் அருள்வாக்கு ஈண்டு சிந்திக்கத் தக்கது.

"பத்திமையால் பணிந்து, அடியேன் தன்னை பன்னாள் பாமாலை பாட பயில் வித்தானை"
என்று அப்பரடிகள் அருளிய தேவார பதிகத்தை மெய்யுருக படிக்குங்கால் ஈசனருளை உணரலாம்.



தாயினும் சாலப் பரிவுடைய தயாநிதியை ஆராத இன்பம் அருளும் ஆதியும் அந்தமும் இல்லா அருட் பெருஞ் ஜோதியை, இந்த ஊன் உடம்பை உயிரிலே ஏற்றிடவைத்த அருள் கருணையை மனித உடம்பை கூடு என்கிறார்கள்! இந்த மனித கூட்டுக்குள்ளே உயிர் பறவையை புகுத்தியும், படியளந்தும், பாதுகாத்தும் நிறைவில் வீடு பேற்றினையும் வழங்கும் அருட் செயலை என்ன வென்பது?

மனிதனால் எல்லாமே முடியும் என்பார்கள் பகுத்தறிவாளர்கள்! எல்லாமே முடியும் என்றால் எப்படி? எல்லாம் அவன் செயல் என்பார்கள் எல்லாமே சிவன் செயல் என்பதே பேருண்மை.

மனிதன் உயர்வதற்கு உயிர் வாழ்வதற்கு ஒரு சக்தி தேவைப்படுகிறது அந்த சக்தி எங்கிருந்து வருகிறது? இரையால் வருகிறதா? இறையால் வருகிறதா? உண்பது மனிதன் செரிக்க வைப்பது இறைவன்.

ஒருவன் சுவைக்கும் அனுபவத்தை இன்னொருவனால் சொல்ல முடியாது. மற்றவர்கள் உணர்ந்த மகானுபவத்தை தாங்களும் உணரும் போதுதான் பேரின்ப பேற்றினை அருட் கருணையை பெறுகின்ற யோகத்தை அடைகின்றனர்.

எல்லாவித ஜீவன்களிடமும் சிவன் உறைந்துள்ளார் சிவ ஈடேற்றம் அடைவதில்லை சிவனுக்கு

நிரந்தரமும் இல்லை. எவ்வித பெருமையும் ஆளுமையும் இல்லை. நீர்குமிழியின் சிறப்புக்கூட மனிதனுக்கு இல்லை.

ஆன்றோர்கள் இதில் தெளிவு பெற்றதால் நாயினும் கடையேன் என்று தங்களை தாங்களே தாழ்த்திக் கொள்கிறார்கள். சைவ சித்தாந்த உண்மை விளக்கம் யாதெனின் அன்பு மட்டுமே சிவ ரூபமானது.

அன்பு என்ற ஒளியை யார் ஏற்றி வைக்கின்றார்களோ அவர்களுக்கு மட்டுமே சிவ ஜோதி தரிசனம் கிடைக்கும்.

சிவன் முத்திரை உபதேசம் மணிவாசகப் பெருமானுக்கு மட்டுமல்ல நமக்கும்தான்! ஆணவம், கன்மம், மாயை ஒட்டி இருக்கும் வரை பதியை பசு அடைய இயலாது தென்முக கடவுளாம் ஸ்ரீ தஷ்ணா மூர்த்தி வடிவான ஈசனின் அருளுடையாகும்.

குண்டலினி சக்தியை எவ்வாறு ஆட்படுத்துவது என்பதை விநாயகர் அகவலில் ஔவை நெறிப்படுத்தி உள்ளார்!

மூலாதாரத்தின் மூண்டெழு கனலைக் காலால் எழுப்பும் கருத்தறிவித்தே என்ற வரிகளில் ஔவை ஓம் நமச்சிவாய என்ற பஞ்சாட்சர மகா மந்திரத்தை உள்ளம் உருக உச்சரிக்கும் போது நாபிக்கமலத்தில் இருந்து எழும் யோகத்தீயை ஓம் என்று உச்சரிக்கும் போது எழும் காற்றானது நம்மை உயர்த்தும் என்பதே உண்மை.

அப்போது ஒன்று பரம்பொருளான சிவனிடம் ஒன்றியிருந்து. ஒன்றென்று எண்ணி ஓம் நமச்சிவாய என்று உள்ளம் உச்சரிக்க உச்சரிக்க... எல்லாமே வசப்படும்.

யாராலும் சாதிக்க முடியாத காரியங்களைக்கூட நாம் சாதிக்கலாம். அந்த சாதனைகள் மகுடங்கள் சூடும்போது அந்த சாதனை மகுடங்களுக்கு நாம் காரணம் இல்லை நம்முள் உறைந்துள்ள சிவனே பெருங்காரணம் என்பதை உணர வேண்டும். God is everywhere என்ற கூற்றுக்கேற்ப உயிர் உள்ள பொருள்களிலும், உயிரற்ற பொருள்களிலும் சிவன் தவம் புரிகிறது பரிபக்குவம் உள்ளவர்களால் மட்டுமே இஃது புரிந்து கொள்ள இயலும்.

எழுதியவர்
சைவ சித்தாந்த செம்மல்
கவிஞர் சீனு செந்தாமரை
கடலூர்

# ஜோதிடக்கதை
# மாட்டு வண்டி

ஜோதிடம் சொல்லும் பயன்கள் நல்லதோ கெட்டதோ... எப்படி இருந்தாலும் அதை நம் தெளிந்த மதியால் ஆராய்ந்து நமக்கு சாதமாக மாற்றிக் கொள்ளலாம் என்பதை விளக்குவதே இந்தக்கதை அதாவது விதியை மதியால் வெல்லலாம் என்று சொல்வார்கள் அதில் ஒரு சிறு திருத்தம். விதியை தெளிந்த மதியால் வெல்லலாம் என்பதே உண்மை, கதைக்குள் செல்லலாம்.

சுமார் 50 வருடங்களுக்கு முன்பு..
ஒரு சிறு கிராமம், அந்த கிராமத்தின் கடைக்கோடியில் ஒரு குடிசை வீடு! மண்சுவர், ஓலை வேயப்பட்டிருந்தது. மழை பெய்தால் வீட்டிற்குள்ளேயே குடை பிடிக்க வேண்டும் என்ற நிலையில் இருந்தது அந்த குடிசை.



வீட்டிற்கு முன்னால் ஒரு பழைய கட்டை வண்டி அந்த கட்டை வண்டிக்கு அருகில் இரண்டு காளை மாடுகள் கட்டப்பட்டிருந்தது. அந்த குடிசை வீட்டின் சொந்தக்காரனான 40வயது தங்கப்பன் தான் இந்த மாட்டு வண்டிக்கும் சொந்தக்காரன்.

இந்த வீட்டையும் மாட்டு வண்டியையும் தவிர வேறு சொத்து எதுவும் தங்கப்பனுக்கு இல்லை, காலையில் பக்கத்தில் உள்ள பெரிய ஊருக்கு வண்டியை ஓட்டிச் செல்வான். அங்கு கடைகளில் மூட்டையோ விறகோ கொண்டு செல்லச் சொன்னால் அதை உரிய இடத்தில் ஒப்படைத்துத் திரும்புவான்.

அதில் கிடைக்கும் கூலி மற்றும் வண்டிக்கான வாடகைக் கட்டணமும் மாட்டுக்கு தீனி வாங்கவே பெரும்பகுதி செலவாகிவிடும். மீதி உள்ள பணத்தைக் கொண்டு கூழோ கஞ்சியோ காய்ச்சி குடித்து தங்கப்பனும் அவன் மனைவி கோதையும் ஒரே ஒரு குழந்தையும் வயிறு வளர்த்து வந்தனர்.

தனக்கு விடிவே கிடையாதா? வறுமை விலகாதா? என தினமும் மாரியம்மனை வேண்டிக்கொண்டு தன் பிழைப்பைத் தொடங்கிடுவான் தங்கப்பன்.

ஒரு நாள்
வண்டிக்கு சரியாக ஓட்டம் இல்லை, மாடுகளுக்கு தீனி வாங்கவே கிடைத்த பணம் போதவில்லை, வீட்டிற்கு வந்தவன் மனைவியிடம் சொல்லிவிட்டு தண்ணீரை வயிறுமுட்டக் குடித்து விட்டு படுத்தான். அழுகின்ற குழந்தையை அணைத்து சமாதானம் செய்தவாறே கோதையும் கண்ணீரை அடக்கியபடி அமர்ந்து, விளக்குத் திரியை தூண்டி விட்டாள்,

சற்று நேரத்தில் அம்மா தாயே என்ற குரல் கேட்டு எரிச்சலுடன் எழுந்து வெளியே வந்தான் தங்கப்பன். வெளியே... மங்கிய வெளிச்சத்தில் ஓர் சன்னியாசி நின்றிருந்தார். மெல்லிய தேகம், ஆனால் அவரது கண்களின் தீட்சன்யமான பார்வை அந்த இரவையும் வெல்லுகின்ற பிரகாசத்துடன் இருந்தது. தங்கப்பன், யாரய்யா நீர்? என்றான்

நான் ஒரு சன்னியாசியப்பா என மெல்லிய முறுவலுடன் கூறினார். மிகுந்த சலிப்புடன் தங்கப்பன் சரிதான் போ நானே சம்சாரம் பண்ண முடியாம எப்படா சன்னியாசம் வாங்கலாம்னு பார்க்கறேன் நீ வேற என்னய்யா வேணும் என்றான்.

பரதேசிக்கும் பசிக்குமேப்பா உன் குடிசையில் எனக்கு ஏதாவது கிடைக்குமா என்று பார்க்க வந்தேன் ஆனால், உன் முகத்தைப் பார்த்த பிறகுதான் நீ என்னைவிட பசியுடன் இருக்கிறாய் என்று தெரிகிறது உன்னிடம் நான் என்ன கேட்பது? என சிரித்தார். பரவாயில்லையே என்னைப் பார்த்தவுடனே கண்டு பிடிச்சிட்டியே உனக்கு ஜோசியம் தெரியுமா என தங்கப்பன் கேட்க, நான் முக்காலமும் உணர்ந்தவனப்பா என்றார் சன்னியாசி.

என்னவோ எல்லாம் தெரிஞ்சவன்னு சொல்ற! நீயும் பட்டினியா தான் இருக்கற நாளைக்கு என்ன நிலைமைன்னு தெரியாத நானும் பட்டினியா தான் இருக்கறேன். என கிண்டலாக தங்கப்பன் சொல்ல, சிரித்தபடியே அவர், நீ பிழைக்க தெரியாதவன், என சிரித்தார், சற்றே வெகுண்ட தங்கப்பன், நானா? பொழப்பத்தேடி நாயா அலையுற இந்த தங்கப்பனா பொழைக்கத் தெரியாதவன்? போதும் சும்மா இரு என்றான்.

கோபம் கொள்ளாதே தங்கப்பா! உன் முகக்குறி காட்டுகிறது உன் விதியை என்றார். கோபம் கொஞ்சமும் குறையாமல் தங்கப்பன், என் விதி எனக்குத் தெரியும், மாட்டு வண்டிய வச்சிகிட்டு மாரடிக்கணும்ன்றது தான் என் விதி அத நீ ஒன்னும் சொல்ல வேணாம், என்றான்.

தங்கப்பா என் சொல்படி கேட்டால், இந்த மோசமான வறுமையிலிந்து நீ மீண்டு வருவாய் ஓரளவு நிம்மதியாகவும் வாழ்வாய், என்றார் சன்னியாசி அப்படி என்னத்த சொல்லப்போற சொல்லு கொஞ்சமும் நம்பிக்கையில்லாமல் கேட்டான் தங்கப்பன்.

உடனே நீ இந்த வண்டி மாட்டை விற்றுவிடு! அவர் சொன்னது தான் தாமதம் கோபம் தாளாத தங்கப்பன், உனக்கு என்ன புத்தி கெட்டுப் போச்சா? எம் பொழப்பக் கெடுக்கப் பார்க்கற? இந்த வண்டி

மாட்ட வச்சித்தான் ஜீவனமே நடக்குது இத வித்திட சொல்றியா? என்று எகிறினான்.

கொஞ்சம் பொறு தங்கப்பா நீ சொன்னது சிரிதான் உன் ஜீவனமே இந்த வண்டி மாட்டால் தான் நடக்கிறது. இதை நீ விற்று விட்டால். இடைமறித்த தங்கப்பன், உன்ன மாதிரி நானும் தெருத்தெருவா கையெந்தி பிச்சை எடுக்கணும் என்றான்.



சிரித்த சன்னியாசி, நான் சொல்வதைக்கேள் உனக்கு இதில் தான் ஜீவனம் என்று எழுதி விட்டான் இறைவன். இதை நீ விற்று விட்டாலும் வேறு ஒரு மாட்டு வண்டியில் உன் ஜீவனம் நடக்கும் எனவே, நீ முதல் வேலையாக உன் வண்டி மாடுகளை விற்று வீட்டுத்தேவையை பூர்த்தி செய்.

மற்றவை எல்லாம் தானாக நடக்கும், அனைத்தும் நல்லதாகவே நடக்கும், என்றபடி சிரித்தவாறே அங்கிருந்து அகன்றார்.

மாட்டு வண்டியால் தான் ஜீவனம் இதை விற்று விடு இந்த வார்த்தைகளே இவன் மனதில் மீண்டும் மீண்டும் ஒலித்தது, ஒரே குழப்பம்! கலங்கிய குட்டை போல தங்கப்பன் மனம் குழம்பியிருந்தது . சற்றே அமைதியுடன் இருட்டில் அமர்ந்து பொறுமையாய் யோசித்தான். நமக்கு பொழப்பே இந்த மாட்டு வண்டி தான் நாம பட்டினி கிடக்கிறது ஒரு பக்கம்னா, மாடுகள பசியாத்தறது பெரும்பாடா இருக்குது, பேசாம தொழில மாத்துவோம். அந்த சாமி சொன்ன மாதிரி வண்டி மாட்ட வித்துட்டு கூலி வேலைக்குப் போவோம், சாமியோட சொல்ல பொய்யாக்குவோம்.பட்டினி கிடந்தாலும் நம்மோட போகட்டும், மாடு தப்பிக்கட்டும், என தீர்க்கமான முடிவுக்கு வந்தான் தங்கப்பன்.

மறுநாள் காலை சந்தையில் மாட்டு, வண்டியை விற்றான், புதிய துணிமணிகள் உணவுப் பொருட்கள் வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கினான், கூலி வேலைக்கு வருவதாக இரண்டு நபரிடம் சொல்லி வைத்து வீட்டுக்குத் திரும்பினான், வண்டி மாட்டை விற்றதை தெரிந்து கண்டபடி திட்டினாள், கோதை! இருந்தாலும் அன்றிரவு அவர்கள் வீட்டில் அரிசிச்சோறு! நிம்மதியாய் சாப்பிடுப் படுத்தனர், நாளை வேலை கிடைக்குமா? தங்கப்பன் மனம் அலை மோதியது, தூங்கிவிட்டான்

மறுநாள் காலை

தங்கப்பனின் நண்பன் வந்து கதவைத்தட்டி எழுப்பினான். கண்களை கசக்கியபடி வெளியே வந்த தங்கப்பனிடம் பக்கத்து ஊர் பண்ணையார் அவரது தோட்டத்தில் விளையும் காய்கறி மற்றும் தேங்காய்களை தினசரி சந்தைக்குக் கொண்டு செல்ல உன்னை வரச் சொன்னார், என்றான். என்னிடம் மாட்டுவண்டி இல்லையே விற்று விட்டேனே என்றான் தங்கப்பன்.

தேவையில்லை அவரிடம் நிறைய வண்டிகள் உள்ளன. நீ நம்பிக்கையானவன் என்பதால் உன்னை அழைக்கிறார் என நண்பன் சொன்னான்.

தங்கப்பன் பண்ணையாரிடம் செல்ல, பண்ணையாளாக சேர்த்துக் கொள்ளப் பட்டான். தினமும் மாட்டுவண்டி பயணம். நிம்மதியான வேலை கைநிறைய காசு, நிம்மதியாக வாழ்க்கை நடந்தது.

சிறுகச்சிறுக சேமித்து மாட்டு வண்டி பசுமாடுகள் என வளர்ந்து பால் பண்ணை வைத்தான், ஆனாலும் மாட்டுவண்டி உத்தியோகத்தை விடவில்லை.

சன்னியாசி சொன்னது போல தங்கப்பனுக்கு மாட்டு வண்டியில் தான் ஜீவனம் நடந்தது ஆனால், முன்பைவிட வசதியாக நிம்மதியாக வாழ்ந்தான்.

இதுதான் விதி என்றால் அந்த விதியை சாதகமாக மாற்றிக் கொள்ளும் தெளிந்த மதி இருந்தால் வாழ்க்கையில் முன்னேறலாம்.

~ ரா. பன்னீர்செல்வம்



# வற்றாத செல்வசெழிப்பை அள்ளித்தரும் கனகதாரா எந்திரம்

கனகதாரா என்ற சமஸ்கிருத சொல் இரண்டு சொற்களை உள்ளடக்கியதாக உள்ளது. ”கனக” என்ற சொல்லிற்கு ”தங்கம்” என்ற பொருளும் ”தாரா” என்ற சொல்லிற்கு ”நிற்காத / வற்றாத” என்ற பொருளும் உண்டு. ஒரு முறை ஆதிசங்கரர் ஏழை பிராமணப் பெண் ஒருவர் வீட்டிற்கு சென்று யாசகம் கேட்ட பொழுது அந்த பெண் தனது வீட்டில் உள்ள எல்லா அறைகளிலும் தேடிபார்த்த பொழுது யாசகம் கொடுக்க வீட்டில் எதுவும் இல்லாததை கண்டு செய்வதறியாது திகைத்து நின்றார். அப்பொழுது தன் வீட்டிலிருந்த நெல்லிக்கனியை ஆதி சங்கரருக்கு யாசகமாக வழங்கினார். அந்த பெண்மணியின் தன்நலமற்ற சேவையை பாராட்டி 21 ஸ்லோகங்களை லக்ஷ்மி தேவியை போற்றி பாடினார். ஆதிசங்கரரின் பக்திக்கு மனமுருகி லக்ஷ்மி தேவி அவர் முன் தோன்றி தன்னை அழைத்ததற்கான காரணத்தை கேட்டார். அதற்கு ஆதிசங்கரர் இந்த ஏழை பிராமணப் பெண்ணின் வறுமையை போக்க வற்றாத செல்வ வளங்களை அளிக்குமாறு கேட்க. லக்ஷ்மி தேவி இந்த பெண் எந்த வித நல்ல கர்மாக்களையும் முற்பிறவிகளில் செய்யவில்லை என்று தயக்கம் காட்டி நின்றார். பின் ஆதிசங்கரர் தான் அந்த பெண்ணிடமிருந்து நெல்லிக்கனியை யாசகமாக பெற்றதை கூறியவுடன் ஏழை பிராமணப் பெண்ணை ஆசீர்வதித்து விட்டு அவர் வீடு முழுவதும் தங்க நெல்லிக்கனியை நிரம்பச் செய்தார். எனவே கனகாதாரா எந்திரத்தை வைத்து கிழே கொடுக்கப்பட்டுள்ள மந்திரத்தை 108 முறை தினமும் உச்சரித்து வந்தால் வற்றாத பொன் பொருள் சேர்க்கையும் வாழ்வில் எல்லாவிதமான வற்றாத வளங்களையும் பெற்று இன்புற்று வாழலாம்.

கனகதாரா மந்திரம்:
”ஓம் வம் ஸ்ரீம் வம் ஆயிம் ஹ்ரீம் ஸ்ரீம் கிளீம் கனகதாராயே நம”




~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்

# மூலிகை ரகசியம்

## தூதுவளை (Solanum trilobatum)

நமது மூலிகை ரகசியம் பகுதியில் ஒவ்வொரு இதழிலும் ஒவ்வொரு மூலிகையைப் பற்றியும் அவற்றின் பயன்களைப் பற்றியும் விளக்கமாகப் பார்த்து வருகிறோம். அந்த வகையில் இங்கு நாம் பார்க்கவிருக்கும் மூலிகை தூதுவளை என்னும் அற்புத மூலிகையாகும்.

இந்த தூதுவளை சாதாரணமாக வீட்டுத் தோட்டங்களிலும் வயல்களில், சாலையோரங்களில் காணப்படும் வேலிகளில், நீர் நிலைகளின் ஓரங்களில் வெகுவாக வளரும் தன்மை கொண்டது.

இது முட்கள் சற்றே நிறைந்து காணப்படும் செடிவகையாகும். இதன் இலைகள் மட்டுமின்றி காம்புகளும் மருத்துவ குணம் நிறைந்ததாய் உள்ளது.



**தூதுவளை குணப்படுத்தக் கூடிய நோய்கள்:**

சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரையும் காலமெல்லாம் தாக்கக்கூடிய சளி, இருமல், காய்ச்சல், சுவாசப்பாதை கோளாறுகள் என சுவாச பாதிப்புகள் அனைத்தையும் தீர்க்கும் ஆற்றல் கொண்டது இந்த தூதுவளை மூலிகை.

**பயன்படுத்தும் முறை:**

இன்றும் நமது கிராமங்களில் சமையலில் பயன்படுத்தி பலன்பெறும் பாட்டிகளும் இருக்கிறார்கள் எனவே பாட்டி வைத்தியத்தில் முக்கியத்துவம் பெற்றுள்ளது இந்த மூலிகை

இதன் இலை மற்றும் காம்புகளை கசாயம் செய்து அருந்திவர சுவாசக் கோளாறுகள் நீங்கும்.

இலை வேர் ஆகியவற்றை நிழலில் உலர்த்தி பொடி செய்து சூரணமாகவும் தேன் கலந்து பயன்படுத்தலாம்.

இது உஷ்ணசக்தி மிகுந்தது என்பதனால் 10வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு 50மி.லி க்கு மேல் கொடுக்கக் கூடாது.

பெரியவர்கள் அரைடம்ளர் வரை குடிக்கலாம். சாதாரணமாக எங்கும் கிடைக்கக்கூடிய தூதுவளை மூலிகையை பயன்படுத்தி சுகமான சுவாசத்தை அனுபவித்து நீண்ட நாள் வாழலாம்.


~ ரா. பன்னீர்செல்வம்

~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்



# மேஷம்

- இளமை பருவத்தில் உள்ள மேஷ ராசி அன்பர்கள் மனதில் காதல் மலரும்.
- உங்கள் தோற்றத்தில் கவர்ச்சி கூடும். நீங்கள் எதிர் பாலினத்தவரைக் கவர்வீர்கள்.
- திருமணமான மேஷ ராசி அன்பர்கள் தங்கள் வாழ்க்கைத் துணைக்கென நேரம் ஒதுக்கி அவர்களுடன் கலந்து உறவாடுவதன் மூலம் உறவு வலுப்படும்.
- நண்பர்களிடம் நல்லுறவை வளர்த்துக் கொள்வீர்கள்.
- கலை மற்றும் இசையின் மீது ஆர்வம் கூடும்.
- தங்களின் வேலை மற்றும் நிதிநிலையில் முக்கிய மாறுதல்கள் ஏற்படும்.
- பணியிடத்தில் பதவி உயர்வு கிட்டும். அதன் மூலம் உங்கள் வருமானம் உயரும்.
- இந்த மாதத்தில் கூட்டுத் தொழில் சிறப்பாக இருக்கும். இந்த மாதம் வெளிநாட்டு தொழில் வாய்ப்புகள் கிட்டும்.
- இந்த மாத பிற்பகுதியில் பெரிய அளவிலான ஆரோக்கிய பாதிப்புகள் இல்லாவிட்டாலும் சிறு சிறு உபாதைகள் வந்து போகும்.
- தினமும் உடற்பயிற்சி மேற்கொள்வதன் மூலம் உங்கள் ஆரோக்கியத்தை பாதுகாத்துக் கொள்ள முடியும்.
- மாணவ மாணவியர்களுக்கு இந்த மாதம் சிறப்பான மாதமாக இருக்கும். விடாமுயற்சியுடன் கல்வி பயின்று வெற்றி காண்பார்கள்.



# ரிஷபம்

- காதலர்களுக்கு இந்த மாதம் சாதகமாக இருக்கும். என்றாலும் நீங்கள் உங்கள் வார்த்தைகளில் கவனமாக இருக்க வேண்டும். கடுமையான வார்த்தைகளை தவிர்க்க வேண்டும்.
- திருமணமான தம்பதிகள் இந்த மாத இடைப் பகுதியில் வேலை மற்றும் பயணங்களில் அதிக நேரம் செலவு செய்ய நேரும் என்பதால் உங்கள் குடும்பத்திற்கென நேரம் ஒதுக்க வேண்டும்.
- இந்த மாதம் உங்கள் மனதில் ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும்.
- தங்களின் உத்தியோகம் நிமித்தமாக வெளிநாடு செல்வதற்கான வாய்ப்பு ஏற்படும்.
- உங்கள் முதலீடுகள் வளர்ச்சி காணும். கடன்களை அடைப்பீர்கள்.
- தங்களின் புதிய சுயதொழிலும், தொழில் கூட்டாளிகளும் வளர்ச்சி காண்பார்கள்.
- வேலையில் உள்ள தங்களின் எதிர் கால திட்டம் குறித்து உங்கள் மேலதிகாரிகளுடன் கலந்து ஆலோசிப்பீர்கள்.
- இந்த மாதம் வெற்றி வாய்ப்பு உங்களை நாடி வரும். உங்கள் பெயர் புகழ பெருகும்.
- அரசுத் துறை சார்ந்து தொழில் செய்பவர்கள் இந்த மாதம் சிறந்த முன்னேற்றம் காண்பீர்கள். உங்கள் சக பணியாளர்கள்மற்றும் மேலதிகாரிகள் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள்.
- உங்கள் ஆரோக்கியம் இந்த மாதம் சிறப்பாக இருக்கும் என்றாலும் மனதில் சிறிது பதட்ட நிலை இருக்கும்.



# மிதுனம்

- கணவன் மனைவி உறவு சிறப்பாக இருக்கும் என்றாலும் சில கருத்து வேறுபாடுகள் காரணமாக வாக்குவாதங்கள் எழும்.
- இளவயது மிதுன ராசி அன்பர்களின் மனதில் காதல் அரும்பும் தெய்வீகக் காதலாக இருக்கும். எனவே நீங்கள் உங்களைப் போலவே நேர்மையாக இருக்கும் துணையை நாடுவீர்கள். நீங்கள் பணி புரியும் இடத்தில் அல்லது ஆலயத்தில் உங்களுக்கான துணையைக் கண்டு கொள்ளும் வாய்ப்பு உள்ளது.
- உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பணியில் சில பின்னடைவுகளும் சவால்களும் காணப்படும். என்றாலும் இந்த மாதத்தின் கடைசி பகுதியில் பணியிடப் பிரச்சினைகள் தீரும். அதிக பணிகள் காரணமாக உங்கள் மனதில் பதட்ட நிலை இருக்கும்.
- கூட்டுத் தொழில் செய்பவர்கள் நன்மை தீமை கலந்த பலன்களைப் பெறுவார்கள்.
- புதிய தொழில் ஒப்பந்தங்கள் கிடைக்கும். உங்கள் தகவல் தொடர்புத் திறன் அதிகரிக்கும். உங்கள் பெயரும் புகழும் ஓங்கும். நீங்கள் எதிர் பாராத திசையில் இருந்து தொழில்வாய்ப்புகள் வரும்.
- இந்த மாதம் உங்கள் ஆரோக்கியம் மேம்படும். என்றாலும் மனதில் காணப்படும் பதட்டம் காரணமாக இனம் புரியாத உடல் உபாதைகள் ஏற்படும். யோகா மற்றும் தியானம் மற்றும் இறை வழிபாடு மூலம் உங்கள் ஆரோக்கியத்தை நீங்கள் சீராக தக்க வைத்துக் கொள்ளமுடியும்.
- மாணவர்கள் கல்வியில் ஏற்றம் காண்பார்கள்.




# கடகம்

- காதல் உறவில் இருப்பவர்களுக்கு கருத்து வேறுபாடுகள் உண்டாகும்.
- காதல் துணையுடன் வாக்கு வாதத்தில் ஈடுபடாதீர்கள்.
- உங்கள் திருமண உறவு மற்றும் வாழ்க்கை சிறக்க கிரக நிலைகள் சாதகமாக உள்ளது.
- உங்கள் தந்தை மற்றும் அலுவலகத்தில் மேலதிகாரிகளுடன் சில பிரச்சினைகள் எழ வாய்ப்பு உள்ளது. தந்தை வழி உறவினர்களிடம் உறவை வலுப்படுத்திக் கொள்ள விரும்புவீர்கள்.
- பணியிடத்தில் உங்கள் மதிப்பும் மரியாதையும் காக்கப்படும் உங்கள் தொழில் சிறப்பாக இருக்கும். பணியில் பதவி உயர்வு கிடைக்கும். அதனால் வருமானம் உயரும். பிறருக்கு கடன் அளிக்கும் விஷயத்தில் கவனமாக இருக்கவும்.
- குடும்ப உறுப்பினர்களுடன் சிறு சிறு பிரச்சினைகள் தோன்றினாலும் அது பெரிய அளவில் பாதிப்பை அளிக்காது.
- உங்கள் தோற்றத்தில் வனப்பு கூடும். வாழ்வில் முன்னேற்றம் கிட்டும்.
- இந்த மாதம் உங்கள் நிதிநிலை மகிழ்ச்சி தரும் வகையில் இருக்கும். வீடு மராமத்து வகையில் செலவுகளை மேற்கொள்வீர்கள்.
- இந்த மாதம் நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள். வெளிநாடுகளில் வேலை தேடுபவர்களுக்கு இந்த மாதம் சாதகமாக இருக்கும்.
- அரசுத் துறை மற்றும் வங்கித் துறையில் இருப்பவர்களுக்கு. வேலை தேடுபவர்களுக்கு இந்த மாதம் வேலை கிட்டும்.
- உங்கள் ஆரோக்கியம் சுமாராக இருக்கும். பெரிய அளவிலான உடல் நல பாதிப்புகள் ஏதும் இருக்காது.



# சிம்மம்

- காதல் உறவில் உள்ளவர்களுக்கு இன்பச்சுற்றுலா செல்லும் வாய்ப்பு ஏற்படும்.
- திருமணமான தம்பதிகளுக்கு தாம்பத்யத்தில் நல்லிணக்கம் கூடும்.
- அதிக பணிகள் காரணமாக உங்களால் குடும்பத்திற்கென அதிக நேரத்தை ஒதுக்க இயலாது.
- வெளியிடங்களுக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்பதால் நீங்கள் சில காலம் உங்கள் குடும்பத்தை விட்டுப் பிரிய வேண்டியிருக்கும்.
- உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பணியிடத்தில் பதவி உயர்வு கிடைக்க வாய்ப்பு உள்ளது. ஆனால் நீங்கள் கடினமாக உழைக்க வேண்டியிருக்கும்.
- உத்தியோகம் காரணமாக சிலருக்கு வெளிநாடு செல்லும் யோகம் உண்டாகும்.
- நிதிநிலையைப் பொறுத்தவரை சாதகமான நிலை காணப்படும். உங்களில் சிலர் வேலை மாற்றங்களை விரும்புவீர்கள்.
- திருமணம், குழந்தை பிறப்பு போன்ற சுப காரியங்களுக்கான விரயங்கள் ஏற்படலாம்.
- பயணத்திற்காகவும் நீங்கள் பணத்தை செலவு செய்ய நேரும்.
- மன அழுத்தம் காரணமாக  மற்றும் தவறான உணவு முறை காரணமாக அஜீரணக் கோளாறுகள் ஏற்படும். மற்றபடி பெரிய அளவிலான பாதிப்புகள் ஏற்படாது.




# கன்னி

- இளம் வயது காதலர்கள் தங்கள் துணையிடம் தங்கள் உண்மையான காதலை வெளிப்படுத்துவீர்கள்.
- உங்கள் வாழ்க்கைத் துணையுடன் உங்கள் பொன்னான நேரத்தைக் கழிப்பீர்கள்.
- குடும்ப உறவுகளுக்கு முக்கியத்துவம் அளிப்பீர்கள். குடும்பத்தில் ஏற்படும் சில பிரச்சினைகளை நீங்கள் தீர்க்கவேண்டியிருக்கும்.
- குடும்பப் பொறுப்புகளை மேற்கொள்வதன் மூலமும் குடும்ப உறவுகளின் தேவைகளை பூர்த்தி செய்வதன் மூலமும் உங்கள் உறவு வலுப்படும்.
- பங்கு வர்த்தகத்தில் முக்கியமான முடிவுகள் எதையும் இந்த மாதம் எடுக்காதீர்கள். ஏனெனில் அதில் நஷ்டம் ஏற்பட வாய்ப்புள்ளது.
- பணி நிமித்தமான பயணம் உங்களுக்கு நன்மைதரும் வகையில் இருக்கும். வெளிநாட்டுப் பயணங்களைத் தவிர்க்கவும்.
- பணியிடத்தில் உங்கள் மதிப்பும் மரியாதையும் உயரும்.
- பெரிய தொழில் அதிபர்கள் உங்களுடன் தொழில் செய்ய விரும்புவார்கள்.
- அதிகப் பணிகள் காரணமாக மனதில் பதட்டமான நிலை இருக்கும். அது உங்கள் உடல் நிலையை பாதிக்கும் என்பதால் உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள்.
- மாணவர்களுக்கு இது சிறந்த மாதமாக இருக்கும். மாணவர்கள் கவனமுடன் படிப்பார்கள்.
- உயர்கல்வி படிப்பவர்களுக்கு சில தடைகள் இருந்தாலும் இந்த மாத கடைசி பகுதியில் படிப்பில் ஏற்றம் காண்பார்கள்.



# துலாம்

- காதல் குறித்த சில முக்கிய முடிவுகளை எடுக்க உகந்த மாதமாகும்.
- குழந்தைகளுடனான உறவு வலுப்படும். குடும்பத்தில் அமைதி நிலவும்.
- இந்த மாதம் குடும்ப உறவுகள் சிறப்பாக இருக்கும். குடும்பப் பொறுப்புகள் அதிகரிக்கும். நீங்கள் புத்திசாலித்தனமாக செயல்பட்டு அவற்றை சமாளிப்பீர்கள்.
- நல்ல மனிதர்களின் நட்பு மூலம் உத்தியோகத்தில் ஆதாயங்களைப் பெறுவீர்கள்.
- பணி செய்யும் இடத்தில் மேலதிகாரிகளுடன் சில பிரச்சினைகள் வந்து போகும். எனவே நீங்கள் கவனமுடன் செயல்பட வேண்டும்.
- கூட்டுத் தொழில் மூலம் நீங்கள் ஒரு புதிய திருப்புமுனையைக் காண்பீர்கள். புதிய கூட்டாளிகளைக் கண்டு கொள்வீர்கள்.
- புதிய தொழிலை மேற்கொள்வதற்கு இது ஏற்ற மாதம். பயணங்கள் மூலம் புதிய தொழில் வாய்ப்புகளைப் பெறுவீர்கள்.
- இந்த மாதம் உங்கள் பொருளாதாரம் நம்பிக்கை தரும் வகையில் இருக்கும்.
- வீட்டிற்கு வெள்ளை அடித்தல் போன்ற வகையில் செலவுகளை மேற்கொள்வீர்கள்.
- இந்த மாதம் உங்கள் மனதில் துடிப்பும் உற்சாகமும் காணப்படும். அதிக பணிகள் உங்கள் ஆரோக்கியத்தைப் பாதிக்கும். கழுத்து வலி மற்றும்முதுகு வலி போன்ற பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




# விருச்சிகம்

- காதல் உறவில் உள்ளவர்கள் வேலையை விட அன்பிற்கு முக்கியத்துவம் அளிப்பார்கள்.
- கணவன் மனைவி உறவு சிறக்கும்.
- உடன்பிறந்தவர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. கவனம் தேவை.
- இந்த மாதம் நிலம் அல்லது சொத்து வாங்கும் யோகம் உண்டு. கடன் வேண்டி விண்ணப்பித்திருந்தால் அது கிட்டும்.
- குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள், விருந்து மற்றும் விசேஷங்கள் நடக்கும்.
- இந்த மாதம் உத்தியோகத்தில் நீங்கள் சில தவறுகளைப் புரிவதற்கான வாய்ப்பு உள்ளது. எனவே நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்.
- கூட்டுத் தொழில் செய்பவர்கள், சுமுகமான முறையில் தொழில் நடக்கவும் தொழிலில் வெற்றி காணவும் கவனமுடன் செயல்பட வேண்டும்.
- பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். தகவல் தொடர்பு மூலம் நீங்கள் வெளிநாடு மற்றும் உள்நாட்டு வாடிக்கையாளர்கள் மூலம் வருமானம் பெறுவீர்கள்.
- உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.
- மாணவ மாணவியர்கள் அதிக கவனத்துடன் அதிக நேரம் படிக்க நேரும் என்பதால் தங்கள் ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டியிருக்கும்.



# தனுசு

- இளம் வயது தனுசு ராசி அன்பர்கள் தங்கள் நண்பர்கள் மூலம் தங்கள் காதல் துணையை சந்திப்பார்கள்.
- கணவன் மனைவிக்கு இடையே இணக்கம் கூடும்.
- புதிய வீடு மாறுவதற்கு இந்த மாதம் சிறந்த மாதமாகும்.
- குடும்பச் சூழல் மகிழ்ச்சி தரும் வகையில் இருக்கும். பணம் மற்றும் பொது விஷயங்கள் குறித்து இதுவரை குடும்பத்தில் இருந்து வந்த பிரச்சினைகள் யாவும் சீராகும்.
- புதிதாக வேலைக்கு சேர்ந்திருப்பவர்களுக்கு சிறிது பதட்டநிலை இருக்கும். வெளியிடங்களுக்கு சென்று வேலை பார்க்க வேண்டிய சூழல் ஏற்பட வாய்ப்புள்ளது.
- புதிய தொழிலில் முதலீடு செய்வீர்கள். அல்லது பழைய தொழிலை விரிவாக்கம் செய்வீர்கள்.
- உங்களது பழைய நண்பர் ஒருவர் உங்களுக்கு தொழில் சம்பந்தமான ஆலோசனைகளை வழங்குவார்.
- பழைய சொத்துக்கள் அல்லது பழைய வண்டி வாகனங்கள் வாங்கும் வாய்ப்பு உள்ளது.
- அஜீரண கோளாறுகள் வர வாய்ப்புள்ளது. துரித உணவுகளை தவிர்ப்பது நன்மை பயக்கும்.
- மாணவர்கள் படிப்பில் கவனம் சிதறும் வாய்ப்புகள் உள்ளது. பொறுப்புடன் படிப்பது நலம்.
- உயர்கல்வி மாணவர்கள் தேர்வில் வெற்றி பெறுவர்.
- வெளிநாட்டில் உயர்கல்வி படிப்பதற்கான வாய்ப்புகள் கிடைக்கும்.




# மகரம்

- காதல் உறவில் சில குழப்பங்கள்  இருக்கும். திருமணம் குறித்த முடிவுகளை நீங்கள் கவனமுடன் எடுக்க வேண்டும்.
- கணவன் மனைவி பரஸ்பரம் அனுசரித்து நடந்து கொள்வதன் மூலம் நல்லிணக்க உறவு மேற்கொள்ள முடியும்.
- தாய் மற்றும் தந்தையின் நலனில் அக்கறை தேவை.
- உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பணியில் உங்கள் படைப்பாற்றல் வெளிப்படும். உங்கள் சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளுடன் நல்லுறவு காணப்படும்.
- வேலை நிமித்தமாக வெளி நாடுகளுக்கு செல்லும் வாய்ப்பு ஏற்படும்.
- சுயதொழிலில் இந்தமாதம் அதிக லாபங்கள் கிட்டாது.
- கூட்டுத் தொழிலில் வெற்றி காண  இயலும்.
- இந்த மாதம் ஆடம்பர செலவுகளை தவிர்த்து அத்தியாவச செலவுகளை மேற்கொள்வது நன்மை பயக்கும்.
- மாணவர்கள், ஆசிரியர் மற்றும் பெற்றோரின் ஆலோசனைகளைக் கேட்பதன் மூலம் நீங்கள் சிறந்த பலன்களைப் பெறுவீர்கள்.
- வெளிநாடு தொடர்புடைய  தொழில் செய்பவர்கள் தொழிலை சிறிது கவனமுடன் கையாள வேண்டும்.
- உங்கள் ஆரோக்கியத்தில் அதிக கவனம் தேவை. வயிறு மற்றும்  தலை சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படும். என்றாலும் மருத்துவ சிகிச்சை  மேற்கொள்ளும் அளவிற்கு பெரியதாக இருக்காது.
- உயர்  கல்வி படித்து முடிக்கும் நிலையில் இருக்கும் மாணவர்கள் வேலை கிடைக்கப் பெறுவீர்கள்.



# கும்பம்

- காதலில் வெற்றி கிடைக்கும். காதலர்களுக்கிடையே அன்யோன்யம் அதிகரிக்கும்.
- கணவன் மனைவி உறவில் ஒற்றுமை அதிகரிக்கும். தாம்பத்திய உறவில் நல்லிணக்கம் கூடும்.
- வீட்டு பெரியவர்களிடம் கருத்து மோதல்கள் வரலாம். வாக்கில் கவனம் தேவை.
- தாயாருக்கு உடல் நல குறைவு ஏற்படலாம். கவனம் தேவை.
- உத்தியோகத்தில் நீங்கள் சிறப்பாகப் பணியாற்றுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளுடன் நல்லுறவை வளர்த்துக் கொள்வீர்கள்.
- சுய தொழில் செய்பவர்கள் ஒரே தொழிலில் முதலீடு செய்வது கூடாது. பிரித்து முதலீடு செய்வதன் மூலம் உங்கள் தொழில் விரிவதற்கான வாய்ப்பு உள்ளது.
- வெளிநாட்டு தொடர்பான தொழில் நடத்துபவர்களும் சிறந்த ஆதாயம் காண்பார்கள்.
- மாணவர்கள் இந்த மாதம் கல்வியில் பளிச்சிடுவார்கள். சிலருக்கு கல்வி உதவிப் பணம் கிடைக்கும். மாணவர்கள் தன்னம்பிக்கையுடன் செயல்படுவார்கள். இந்த மாதம் மாணவர்களுக்கு நம்பிக்கை தரும் மாதமாக இருக்கும்.
- உடல் ஆரோக்கியத்தில் சிறு சிறு பிரச்சினைகள் வந்து போகும். அஜீரண கோளாறு மற்றும் குடல் சம்மந்தப்பட்ட பிரச்கனைகள் வரலாம். ஆரோக்கிய உணவு உண்பதின் மூலமாக வயிறு சம்மந்தப்பட்ட பிரச்சனைகள் வராமல் தடுக்கலாம்.



# மீனம்

- இளவயது மீன ராசி அன்பர்களின் மனதில் காதல் மலரும். காதல் கை கூடும்.
- கணவன் மனைவி இடையே கருத்து வேறுபாடுகள் வந்து போகும். பேச்சில் கவனம் தேவை.
- குடும்ப வாழ்க்கை சிறப்பாக இருக்கும். குடும்பத்தில் அன்பும் அரவணைப்பும் இருக்கும்.
- உத்தியோகத்தில் உள்ளவர்கள் மேலதிகாரிகளுடன் நல்லுறவை வளர்த்துக் கொள்வார்கள். உங்கள் பணியிடத்தில் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்வீர்கள். அதில் சிறந்து விளங்குவீர்கள்.
- வெளிநாட்டில் வேலை தேடுபவர்களுக்கு வேலை கிடைக்கும்.
- இந்த மாதம் உங்களின் பொருளாதார நிலை சிறப்பாக இருக்க வாய்ப்புகள் உண்டு.
- உயர்கல்வி பயிலும் மாணவர்கள் இந்த மாதம் சிறப்பாக கல்வி பயில்வார்கள்.
- இந்த மாதம் உங்கள் குடும்பத் தொழிலை விரிவு படுத்த நீங்கள் பணத்தை முதலீடு செய்வீர்கள்.
- இந்த மாதம் புதிய ஆடைகள் மற்றும் வாகனங்கள் வாங்குவீர்கள்.
- பிப்ரவரி மாதம் அதிக ஆடம்பர செலவுகளைச் செய்யாமல் செலவை கட்டுபடுத்துங்கள். பட்ஜெட் அமைத்து செலவுகளை மேற்கொள்ளுவது நன்மை பயக்கும்.
- மாசு காரணமாக ஒவ்வாமை அல்லது ஆஸ்துமா போன்ற உபாதைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. உடல்நலனில் அக்கறை தேவை.

அனைத்து ஜோதிட, புரோஹித மற்றும் ஆன்மிக சேவைகளுக்கு
தொடர்புகொள்ள: 88702 88701